

# ஆத்மா

2016

## புனித சில்வெஸ்ரர் கல்லூரி - கண்டி
## இந்து மாணவர் மன்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து மன்ற ஆசிரியர் குழாம்



திருமதி . S. செந்தினி , திருமதி U. சந்திர சேகரன். திருமதி K. ராஜசேகரம் ( பிரதி அதிபர்) திரு. A. ராஜா ரஜ்ஜீத் ( பிரதி அதிபர்) . திரு T.R.S மீட்டியாகொட(அதிபர்)
திரு K. ஜெகநாதன் திரு N கிசோக்குமார் திரு K ஆனந்த வேல் திருமதி J. திருச்செல்வம் திருமதி S. சரோஜினி திருமதி M. பரிமளா
திருமதி U. ராமநாதன் திருமதி V.. உதாரன் திருமதி K.P. தர்சினி திருமதி K ராசையா திருமதி G கங்காதரன் திருமதி P பாரதி திருமதி N புஸ்பராணி
திருமதி S. சிவனாதன் திருமதி Y ராசையா திருமதி L. விஜயகுமரன் திருமதி S. சிசில்குமாரி திருமதி K. சந்திரகலா திருமதி K. சுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# St. Sylvester's College
## Kandy

Hindu Society
Presents

# Vani Vizha - 2016

# ஆத்மா

**On 11th of October 2016**
**at 8.30 a.m in the College**
**Auditorium**

*Chief Guest*
**Mr. K.Krishnamoorthy**
Chief Engineer (C.E.B. Kandy)

*Guest of Honour*
**Mr. A. Jeyapragash**
Deputy Director of Education
Kandy Zonal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதம அதிதியின் வாழ்த்து ............

அன்பே சிவம் ........

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தை கொண்டு வந்தே தீரும்

சிவபூமி என திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்ட இலங்கை நாட்டின் கண்டி மாநகரில் உயர் கல்லரிகளில் ஒன்றாய் விளங்கும் புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் வாணிவிழாவில் கலந்து கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்

இன உறவுகளையும் தேசிய ஐக்கியத்தையும் கட்டிக் காப்பதிலும் வளரத் தெடுப்பதிலும் இக் கல்லூரி முதன்மை உடையதாய் விளங்குகின்றது. என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சகோதரத்துவம் அன்பு, பக்தி, ஒழுக்கம், ஐக்கியம் பிறர் நலம் பேணுதல் போன்ற இன்னோரன்ன சமய பண்பாட்டு விழுமியங்கள் மாணவர்கள் மத்தியில் சிறப்புற வளர்க்கப்பட்டு வருவதனை மாணவர்களின் நடத்தைகள் மூலம் தெளிவாக அறியக் கூடியதாக உள்ளது.

நாட்டிற்கு ஏற்புடைய நற்பிரஜைகளை உருவாக்குவதில் இக்கல்லூரி ஆசான்களின் பணி மிகவும் போற்றத்தக்கதாகும் இங்கு எல்லா சமய நிகழ்வுகளும் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவதன் மூலம் சகோதரத்துவம் எனும் மிக உயர்ந்த விழுமியப் பண்பு கடைப்பிடிக்கப்படுகின்றதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இனிவரும் காலங்களிலும் பல புத்திஜீவிகளையும் நற்பிரஜைகளையும் இக்கல்லூரி உருவாக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

கடமை உணர்வுகள் பாடசாலையை மிக வேகமாக முன்னேற்றிக் கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவமணிகள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வாணிவிழாவும் மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற அன்னை பராசக்தி அருள்பாலிக்க வேண்டுமென வேண்டி இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. க. கிருஷ்ணமூர்த்தி
பிரதம பொறியியலாளர்
இலங்கை மின்சார சபை
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதிதியின் ஆசிகள் ..........

மொழி என்பது ஆதிகாலம் தொட்டே ஒருவருடன் ஒருவர் தொடர்புகளை ஏற்படுத்துவதற்குத் துணை புரிந்த ஒரு தொடர்பு சாதனமாகக கருதப்படுகிறது. அதுமட்டுமின்றி சமயக்கல்வி எனும் பெருங்கோயிலின் பொற்கலசமாகத் திகழ்வதும் இம் மொழியறிவே.

அவ்வகையில் கண்டி, புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மாணவ மன்றத்தினர் முப்பெரும் தேவியருக்கு விழா எடுக்குமுகமாக மிகக் கோலாகலமாகக் கொண்டாடும் வாணி விழாவின் மணிமகுடாமாகத் திகழும் மலர் வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மொழியறிவின் துணை கொண்டே சமயக் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. மாணவர்களின் எழுத்தாற்றல்களைத் தூண்டி வளர்த்து விடுவதே ஒரு சமய நல்லாசிரியர் செய்யத்தக்க பெரும் எழுத்தாற்றல்களைத் தூண்டி வளர்த்து விடுவதே ஒரு சமய நல்லாசிரியர் செய்யத்தக்க பெரும் பணியாகும். அதற்கமைய சமயம் நம் மனதைத் தூய்மைப்படுத்துவதோடு இறையின்பத்தின் அருகில் நம்மைக்கொண்டு சேர்ப்பித்து கவலைகளையும் துன்பங்களையும் தனித்து மனதிலே உயர்ந்த எண்ணங்களை வளர்ப்பதற்குத் துணை புரிகின்றது என்பதை மாணவர்களின் எழுத்தாற்றல் வாயிலாக வெளிக் கொணர்ந்திருப்பது பாராட்டுக்குரியது.

இவ்விதழிலே எழுத்துக்களாகப் பதியப்பட்டுள்ள சமயக் கருத்துக்களை மாணவர்கள் திரும்பக் கற்று மனத்திலே பதித்துக் கொள்ள வேண்டும். கடவுள் நம்பிக்கையைப் பெற இது பெரிதும் உதவும் "சமயம் மனிதனை மனிதனாக்கும்" என்பதை மனதிற் கொண்டு கட்டுரைகள் கவிதைகள் சமயத் தத்துவங்கள் என பலதரப்பட்ட அம்சங்களையும் கொண்டு செழுமையோடு வெளியிட துணைபுரிந்த ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களை மனமுவந்து தெரிவிக்கின்றேன்.

காலத்தில் தேவைக்கருதியும் எமது சமய உண்மைகளையும் சிறப்புக்களையும் திரிபாடாது இலகு நடையில் பதிப்பிக்கும் முயற்சியில் தங்களின் இந்து மன்றம் தொடர்ந்தும் ஈடுபடவேண்டுமென முச்சக்திகளையும் பிரார்த்தித்து ஆசி வழங்குகிறேன்.

திரு. A. ஜெயபிராகாஷ்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வலய கல்வி காரியாலயம் கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அதிபரின் ஆசிச்செய்தி ............

எமது கல்லூரியில் முப்பெரும் தேவியரின் அருளை வேண்டி வருடந்தோறும் புரட்டாதி மாதம் விழா ஏற்படுத்தி போற்றக்கூடிய சிறப்பம்சமாகும்..

துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகிய தெய்வங்களின் மூலம் கிடைக்கின்ற சக்தி தைரியம், சௌபாக்கியம், என்பன எமது மாணவர்ளகளுக்கு கிடைக்க வேண்டும். என பிரார்த்திப்பதோடு எமது கல்லூரியின் பல்வேறு சமய கலாசார பாரம்பரியங்களை கொண்ட ஓர் கலைக்கூடமாகும்.

இக்கலைக்கூடத்தின் கல்வி பயிலும் மாணவர்கள் சிறந்த குணப்பண்புகளை கொண்ட நற்பிரஜைகளாக சமூகத்தில் உள்வாங்கப்படல் வேண்டும் என்பது எனது அவாவாகும்.

சமய மனிதனை நன்நெறிப்படுத்துவதோடு மனிதனை முழு மனிதனாக்குகின்றது. அந்தவகையில் இவ்விழா சிறப்புற உதவி நல்கிய அனைவரையும் வாழ்த்தி எதிர்காலத்தில் மேலும் சிறப்படைய இறைவனின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

திரு **T.R. S.**மீட்டியாகொட
(அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

" வேத நெறி தழைத்தோங்க
மிகு சைவத்துறை விளக்க"

எழில் கொஞ்சும் மத்திய மலைநாட்டின் தலைநகரமான கண்டியில் அமைந்துள்ள சில்வெஸ்ரர் கல்லூரி பல்லினக் கலாசாரங்களை கொண்ட ஒரு பாடசாலையாகும். இக்கல்லூரியின் நிர்வாகம் ஒவ்வொரு மதத்தினரும் தத்தமது சமய விழுமியங்களையும், பாரம்பரியத்தினையும் நிலைநிறுத்த செயற்படும் செயற்பாடுகளுக்கு பாரிய சுதந்திரம் அளிப்பது பாராட்டத்தக்க விடயம்.

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்துக் கொடுப்பது சமயமாகும். சமயம் என்பது மனித வாழ்வினை நெறிபடுத்தி அழைத்துச் செல்லும் உன்னதமான பாதையாகும். அத்தகைய உன்னதமான நற்பண்புகளுள்ள மாணவர்களை தோற்றுவிக்க சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மன்றம் 2008ம் ஆண்டு தொடக்கம் நவராத்திரி தினங்களில் கும்பம் வைத்து மாணவர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி தோத்திரப்பாடல்களைப் பண்ணுடன் இசைத்து மனமுருகி பாடி இறைவனை நவ தினங்களிலும் பூசித்து வழிபாடு செய்யும் செயற்பாடுகள் பாராட்டத்தக்க விடயம்.

ஒரு கல்வி நிலையத்தின் நடவடிக்கைகளையும் அதன் முக்கிய நிகழ்ச்சிகளையும், பயில்வோரின் பல்வேறு ஆக்கங்களையும் வரலாற்று பதிவாக எடுத்துக்காட்டும் பாங்கிலே மலர்கள் வெளியீடும் இடம் பெறுகின்றது 2011ம் ஆண்டு முதன் முதலாக "ஆத்மா" மலர் வெளியீடு இந்துமன்றத்தின் மற்றும் ஒரு பாரிய பணியாகும். 10வது வருட வாணி விழாவை நாம் சிறப்பாக கொண்டாடுவதுடன் இவ்வருடமும் பல்வேறு ஆன்மீக கருத்துக்களை தாங்கிய சஞ்சிகையான "ஆத்மா" மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருப்பதைக் கண்டு உள்ளம் பூரிக்கின்றேன்.

மலர் வெளியீட்டுக் குழுவினர்க்கும் பொறுப்பாசிரியருக்கும் என் வாழ்த்துக்கள்! மேலும் இம்மலர் வெளியீட்டை மெருகூட்ட பல்வேறு ஆக்கங்களை சமர்பித்த மாணவர்களுக்கும்,போட்டிநிகழ்வுகள், கலைநிகழ்ச்சிகள், பூசை ஒழுங்கமைப்பு ஆகியவற்றிற்கு உதவி செய்த மன்ற ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என் பாராட்டுகள்.

சைவ பாரம்பரியத்தின் சிறப்பு மென்மேலும் வளர்ந்து மாணவர்களின் உள்ளங்களில் ஆன்மீக கருத்துக்கள் வளர்ச்சி பெறவும், இந்து மன்ற செயற்பாடுகள் மென்மேலும் விருத்தியடையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

திருமதி. க. இராஜசேகரம்
பிரதி அதிபர் (தமிழ் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதி அதிபரின் ஆசிச் செய்தி

ஒருவரை பூரண மனிதனாக உருவாக்குவது ஆன்மீகம் ஆகும். சைவ சமயிகளாகிய நாம் முழுமுதற் கடவுளாக சிவனை வழிபடுகின்றோம். இந்த வகையில் சக்தியின் ஒரு அம்சமாக கல்விக்குரிய தெய்வமாகிய சரஸ்வதி தாயை வணங்குகின்றோம்.

இந்த வகையில் புனித சில்வெஸ்ரர் கல்லூரியின் இந்து மாணவ மன்றத்தால் நீண்ட காலமாக கட்டுக்கலை பிள்ளையார் கோவிவில் எமது வாணி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்தது. எனினும் புதிய பிரதான மண்டபம் கட்டப்பட்ட பின் 2007 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் எமது பாரம்பரிய கலை, கலாச்சார நிகழ்வுகளுடன் வாணிவிழா சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

மாணவர்களின் எழுத்தாற்றல், பேச்சாற்றல், கலையாற்றல் போன்றவற்றை வளர்ப்பதற்கு இது போன்ற நிகழ்வுகள் மிக இன்றியமையாதவை ஆகும். இந்த வகையில் போட்டி நிகழ்ச்சிகள் கலை நிகழ்ச்சிகள், மலர் வெளியீடு என்பவற்றை சிறப்பாக நடாத்துவதற்கு உதவி புரிந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

வாணி விழா 2016 சிறப்பாக நடப்பதற்கும் எமது கலை, கலாச்சாரம் தழைத்தோங்குவதறகும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதுடன் இவ் விழா சிறப்பாக நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.ராஜா ரஞ்ஜித்
பிரதி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மன்ற பொறுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து .....

சக்திக்காக விழா எடுக்கும் இப்புனித நாட்களில் அனைவருக்கும் முத்தேவியின் திருவருள் கிடைக்கட்டும் என பிரார்த்திக்கின்றேன்

கண்டி மநாநகரின் அமைந்துள்ள மாணவர்களின் அறிவுக் கண்ணை திறக்கும் ஆலயமாக விளங்கும் புனித சில்வெஸ்டர் கல்லாரி வருடந்தோறும் வாணி விழாவினூடாக சக்தியை மகிழ்விப்பதோடு பெருமைக்குரிய விடயமாகவும் அமைகின்றது.

அந்த வகையில் அதிபர், பிரதிஅதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,, பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் ஆத்மா என்ற சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமை கொள்கின்றேன். இப்பணி தொடர வாழ்த்துகின்றேன்.

திரு. K. ஜெகநாதன்
இந்து மன்றம்
பொறுப்பாசிரியர் / இதழாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை.....

## மன்றத் தலைவரின் உள்ளத்திலே..

எழில் கொஞ்சும் மத்திய மலைநாட்டின் கலாசார மாநகரில் விளங்கும் புனித சில்வெஸ்டர் கல்லூரி தனது எழுபத்தாறாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இச்சந்தர்ப்பத்தில் கல்லூரியின் அன்னையின் பாதங்களுக்கு இவ்"வாணி விழா" இதழுக்கு ஆசிச்செய்தி வழங்க இறையருள் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பாடசாலையானது கல்வி, விளையாட்டு, ஒழுக்கம், கலை, கலாசாரம் போன்ற பல்வேறு அம்சங்களில் தமக்கென ஒரு தனி இடத்தை வகிக்கின்றது.

இவ்வகையிலே இவ்வாண்டு எமது பாடசாலை நடாத்தும் வாணி விழா தமிழ் மொழி மற்றும் தமிழர் கலாசாரத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் மட்டுமன்றி இந்து சமயத்தை பற்றியும் கூறுவனவாகவும் சிறப்பாக அமையும்.

இவ்விழாவின் மகுடமாக இந்நூல் வெளியீடு அமைந்துள்ளது. அமிழ்தினும் இனிய தமிழ் மொழியையும் தமிழ் கலாசாரத்தையும் பின்பற்றும் நாம் தமிழ் தாயின் ஆசியே எமது ஆற்றல்களையும், கலை ஆர்வத்தையும் மேம்படுதுவதற்கு இந்நூல் களம் அமைத்துள்ளது.

எதிர் காலத்தில் இந்நூல் குன்றாப் புகழ் பெற்று விளங்க வேண்டுமென வாழத்துகின்றேன்.

M. பிரியகாந்த்
தலைவன்
இந்து மாணவ மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை....

## மன்ற செயலாளர்

"கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடைய கல்லாதவர்"

ஒருவரின் வாழ்க்கைக்கு கல்வி என்பது மிக முக்கியமானது அவ்வகையிலே எமது வாணி விழா மன்ற இதழை வெளியிடுவதையும் இவ்விழாவிற்கு செயலாளராக கடமையாற்ற இறையருள் கிட்டியதையும் இட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

பண்பாடு, கலாசாரம், கலை முதலிய அம்சங்களை பாரெல்லாம் பரவச்செய்யும் வகையிலே சிறப்பு மிக்கதாக அமைந்த வாணி விழாவிலே இவ்விதழ் எமது பாடசாலை தமிழ் மாணவர்களின் எழுத்தாற்றல்களையும். கலையாற்றல்களையும் வெளிக்கொணரும் வகையிலே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்திலும் இவ்விதழ் மென்மேலும் சிறப்பாக வெளிவர வேண்டுமெனவும் தனது புத்தொளிஇலக்கிய உலகெங்கும் பரவவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ்மொழி

செல்வன் தேவேந்திரன்
செயலாளர்
இந்து மாணவ மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியர்...

கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் இந்து மாணவர் மன்றம் பெருமையுடன் வழங்கும் வாணி விழாவிற்கான வாழ்த்துச் செய்தி கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

மத்திய மாகாணத்தின் தலைசிறந்த செழுங்கலையகங்களில் ஒன்றான புனித சில்வெஸ்ரர் கல்லூரி பெரும் வரலாற்றை உடையது. எமது கல்லூரி கல்வி, விளையாட்டு, ஒழுக்கம், கலை, கலாசாரம் போன்ற அம்சங்களிலே தமது பாதச்சுவட்டினை தடம்பதித்துக் கொண்டிருக்கிறது.

அவ்வகையில் எமது கல்லூரி நடாத்தும் வாணி விழா இந்து சமயத்தின் சிறப்பையும் பெருமையையும் எடுத்துக் காட்டுவது மட்டுமின்றி இந்து சமயத்தின் கலாசாரத்துக்கும் பண்பாட்டிற்கும் மெருகூட்டும் வகையில் அமைந்துள்ளமை சிறப்பானதாகும்.

இவ் விழாவில் வெளியிடப்படும் இந்நூல் இந்து சமயத்தின் பெருமையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் இவ்விதழ் மேலும் சிறப்புப்பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

செல்வன் S.ஹரிதரன்
இந்து மாணவ மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேன்மை கொள் சைவ நீதி**
**விளங்குக உலகமெல்லாம்**

அன்பு நெறியாம் எமது சமயத்தின் மேன்மையை சிந்துவெளி காலம் தொட்டு இன்று வரை பலர் வளர்த்தும் போற்றியும் வருகின்றனர் . நாம் வாழ்வதற்கு வாழ வழி காட்டுவது சமயம் ஆகும் சமய விழுமியங்களையும் ஒழுக்கங்களையும் பின்பற்றுபவனே வாழ்க்கையின் உயர்நிலையை அடைய முடியும்

ஆவ்வகையில் எமது பாடசாலைக்கலைத்திட்டத்தில் சமயம் முக்கிய பாடமாக காணப்படுகின்றது மேலும் பாடசாலைகள் மாணவர்களின் சமய விழுமியங்களை மேம்படுத்தவும் சமய அறிவினை வளர்க்கவும் எமது சமய இலக்கியங்கள் பற்றிய தெளிவான விளக்கம் பெறவும் பல்வேறு சமய விழாக்களை நடத்துகின்றோம். ஆவ்வகையில் எமது பாடசாவையில் வருடா வருடம் இடம்பெறும் வாணிவிழாவும் எமது மாணவர்களின் பல்வேறு திறமைகளை வளக்க உதவுகின்றது

இவ்விழாவினை முன்னிட்டு வெளிவருகின்ற ஆத்மா சஞ்சிகை சிறப்பான மாணவர் ஆக்கங்களை தாங்கி இம்முறையும் வெளிவருவதனை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மேலும் இச்சஞ்சியை சிறப்பாபக வெளிவர உதவிய அதிபர் பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் நலன் விரும்பிகளுக்கு நன்றிகளை தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

ஏற்பாட்டுக் குழுவினர்
இந்து மாணவ மன்றம்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜசேகரம் அம்மணிக்கு ஓர் வாழ்த்துப்பா

அன்பே உருவான அம்மையே
நீவீர் வாழ்க
அகம் தனில் அடக்கமதை அணைக்கட்டி
வைத்தீர் தாயே
அறம் காக்கும் ஆசிரிய சேவைதனைத்
தெரிந்தெடுத்தீர்
ஆனந்த குணமார்ந்த அர்ப்பணிப்பு பணிபுரிந்தீர்
நவில்கின்றோம் வாழ்த்துப்பா நம்
இதய வீணையிலே வாழ்த்துப்பா இசைக்கின்றோம்
இனிதாக ஏற்று நீங்கள் இறையருளைப் பெறுவீர்
குறிஞ்சிமா நகர் தனிலே
குன்றாய் ஒளிர்ந்தவரே
குறையாத தியாகத்தால்
குணவதியாய் உதித்தவரே
ஆசிரிய சேவையினை
ஆர்வமாய் ஆற்றினீரே
அதிபராக உயர்வு பெற்று ஆர்வலராய் உழைத்தீர் தாயே
இதய வீணையிலே வாழ்த்துப்பா
இசைக்கின்றோம்
இனிதாக ஏற்று நீவீர்
இறையருளைப் பெறுவீரே
சலிக்காத சன்மார்ப்ப நீதி நெறி
நின்றவரே
சாந்தமாய் நித்தியமாய்ப்
பாங்காகப் பணிகாத்தீர்
தலைசிறந்த சேவையினை
தலை வணங்கி வாழ்த்துகின்றோம்
நம் இதயவிணையில் வாழ்த்துப்பா
இசைக்கின்றோம்
இனிதாக ஏற்று நீவீர்
இறையருளைப் பெறுவீரே
கலங்கரை விளக்கமாய் கண்டியில்
திகழ்ந்தவர் தாம்
கடமைகளை கண்ணியமாய்
கருத்தூன்றி ஆற்றியவர்
சீர் கல்வி கற்றுயர்ந்தும் சிறப்புகள்
ஒருங்கே கொண்டீர்
நம் இதய விணையிலே வாழ்த்துப்பா
இசைக்கினறோம்
இனிதாக ஏற்று நீங்கள்
இறையருளைப் பெறுவீர்
தமிழ் என்ற அமுதமதைத் தரமாகக்
கற்ற தாயே
ஓம் என்ற மந்திரத்தை ஓதி வைத்து
உயர்ந்தவரே
ஒழுக்கம் தரும் வாழ்வினிலே ஓங்கித்
திளைத்தவரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பணி புரிந்து
காத்துவரும் ஆசானே
நம் இதய வீணையிலே வாழத்துப்பா
இசைக்கின்றோம்
இனிதாக ஏற்று நீங்கள்
இறையருளைப் பெறுவீரே
கண்டி மா நகரமதில் கல்விப் புலம்
போற்றும் தாங்கள்
கருத்தான சேவைதனை உளமார
வாழ்த்துகின்றோம்
அம்மணியே அருங்கடலே
அருள் குறையா நியை அமுதே
நிதம் வாழ வாழ்த்துகின்றோம்
நீண்ட ஆயுள் பெறுவீராக
அகம் பெற்று பலம் பெற்று
பல்லாண்டு வாழ்வீராக
நம் இதய வீணையழலே வாழ்த்துப்பா
இசைக்கின்றோம்
இனிதாக ஏற்று நீங்கள்
இறையருளைப்பெறுவீர்
குடும்பம் தழைக்க வேண்டும்
குலதெய்வம் காக்க வேண்டம்
நிறைவான சேவையினால்
நீடுழி வாழ வேண்டும்
செல்வங்கள் பெற்று நீங்கள்
செழிப்பாக வாழ வேண்டும்
அன்புணர்வு –அகவுணர்வு
பெருக நாமும் வாழ்த்துகின்றோம்
இதயமதில் இன்பமாக
இனிதாய் வாழ வாழ்த்துகின்றோம்
அன்பெ சிவம் என்று நாமும்
வாயாரப் போற்றுகின்றோம்

ஆசிரியர்கள்
(தமிழ் பிரிவு)
புனித சில்வெஸ்ரர் கல்லூரி கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இறைவி

அதிகாலையில் எழுந்து கூறும் மந்திரத்திலும்க
காலை மாலை வணங்கும் உருவத்திலும்
நாம் அன்றாடம்
காணும் அனைத்திலும்
உயிராய் இருப்பவள் சக்தியே
சிறப்பு தரும் கல்வியிலும்
தினமும் எழுதும் எழுத்திலும்
கல்வியை தரும் அருளின் வடிவாய்
இருப்பாள் இறைவியே
கற்று உணர்ந்த வேதங்களிலும்
தினமும் ஒளிரும் விளக்கிழும்
கோயிலின் மணி ஓசையிலும்
இருக்கும் சக்தியே இறைவி
துணையாய் நிற்கும் வீரத்திலும்
உயிருள் இருக்கும் சக்தியிலும்
வெற்றியை பெற உதவும் திறமையிலும்
தமக்குள் இருப்பவள் இறைவியே
வீரத்திலுள்ள பயனிலும்
பக்தர்கள் பெறும் அருளிலும்
இறை நம்பிக்கையின' சக்தியிலும்
துணையாய் இருப்பவள் இறைவியே


செல்வன் ஏ. வித்தியாசாகர்

தரம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை சைவப்பாட பரீட்சை 2014
2 ஆம் இடம்
சிறப்பு சான்றிதழ்
ஷவின் சச்சிதானந்தன்



மத்திய மாகாணம் நவராத்திரி விழா 2014
பேச்சுப்போட்டி 1 ஆம் இடம்
S.S பிரனீத்



மத்திய மாகாணம் நவராத்திரி விழா 2014
பேச்சுப்போட்டி 3 ஆம் இடம்
சு. கபிலேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். டிலக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தருவாய் ஆதிபராசக்தியே

உலக மாதாவே உமையம்மையே
உண்மையே நாடினோம் உறவென்று தேடினோம்
அருள் தருவாய் அன்னையே நாம் ஆறுதல் பெற
பொருள் தேடும் இவ்வுலகம்
பொய்மைக்குள் மூழ்கும் முன்னே
மெய்பொருளாம் உன் அருளை
மிளிரச் செய்திடுவாய் மின்னலென இவ்வுலகில்
கண்ணிமைக்குமம் பொழுதுகளில்
கனவுகளும் கொள்ளைகளும்
காதுகளை அதிரச்செய்யும்
கற்பழிப்பு செய்திகளும்
கண்டுணர்வாய் கருணைக்கடலே
காத்திடுவாய்
எம்மை நீயே
வஞ்சமிகு மாந்தர் தம்
வாழ்வினை மேம்படுத்த செய்கின்ற
வனமுறைகளை களைத்திட
கொஞ்சம் அருள் தருவாய் பரா சக்தியே
கொஞ்சும் மழலை முதல்
பொல்லூண்டும் வயது வரை
எங்கும் எதிலும் வஞசமும் கலப்படமும்
நஞ்சில் மூழ்கியுள்ள இவ்வுலகை
நலமுடன் காத்திட அருள் தருவாய் ஆதிபராசக்தியே

ஆக்கம்
திருமதி யூ . சந்திரசேகரன்
ஆசிரியை வர்த்தகப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபம் ஏற்றுவோம்

தீபம் என்பது ஒளி எனப்படும்
ஒளி பிரகாசமானது
தீபம் ஏற்றுவதால் வீட்டில் ஒளி பிறக்கும்
எமது உள்ளங்களிலும் ஒளி பிரகாசிக்கும்
ஒளி இறைவனை குறிக்கும்
தெளிவைத்தரும்
காலையும் மாலையும் சுவாமி அறையில் தீபம் ஏற்றுவோம்

D. J. தவிஷன்
தரம் 3^T

## கடவுள்

உலகைப் படைத்தவர் கடவுள்
அவர் என்றும் உள்ளவர் எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர்
நாங்கள் தினமும் கடவுளை வணங்குவோம்
நாம் தினந்தொறும் ஆலயத்திற்கு சென்று இறைவனை வழிபட வேண்டும்
இறைவனை வணங்கி பூஜைகள் செய்ய வேண்டும்
இறைவனை வணங்கினால் எந்த உதவியும் செய்வார்.
இறைவனை தினந்தோறும் வணங்கி பாடசாலைக்கு செல்ல வேண்டும்

செல்வன் S. சூரியா
தரம் 3^T

## எமது சமயம்

எமக்கு கல்வி செல்வம் வீரம் மூன்றும் அவசியம்.
கல்வியை தரும் தெய்வம் சரஸ்வதி
செல்வத்தை தரும் தெய்வம் லக்ஷ்மி
வீரத்தை தரும் தெய்வம் துர்க்கை

ஆதீஸ் அக்ஷயன்
தரம் 1^T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகப்பெருமான்

தீச்செந்தூரில் வீடு கொண்ட
முருகனுக்கு அரோஹரா
திருத்தணியில் வீடுகொண்ட
முருகனுக்கு அரோஹரா
திருப்பரங்குன்றில் வீடு கொண்ட
முருகனுக்கு அரோஹரா
பழனி மழையில் வீடு கொண்ட
முருகனுக்கு அரோஹரா
சுவாமி மலையில் வீடு கொண்ட
முருகனுக்கு அரோஹரா
பழமுதிர்ச்சோலையில் வீடு கொண்ட
முருகனுக்கு அரோஹரா
ஆறுபடை வீடு கொண்ட
முருகனுக்கு அரோஹரா
அழகுவடிவானவனே
உந்தனுக்கு அரோஹரா
தேவர்களை காத்தவனே
உந்தனுக்கு அரோஹரா

P.ஹரிஷான்
தரம் 9[T]

## சிவபெருமான்

உலகத்துக்கு கர்த்தா சிவபெருமான் அவர் சைவ சமயத்தின் முழுமுதற்கடவுள் ஆவார்.
ஆன்பே உருவானவரும் எங்கும் நிறைந்தவரம் எல்லாம் வல்லவரும் சிவபெருமானே நாம்
யாவரும் சிவபெருமானின் குழந்தைகள். ஓம் நமசிவாய எனும் மந்திரத்தை உச்சரித்து சிவனை வழிபடுவோம்

S.இரோஷன்
தரம் 1[T]

## கடவுள்

உலகத்தை படைத்தவர் கடவுள் தினமும் கடவுளை வணங்குவோம் அவரின் அருளை பெறுவோம்
கடவுள் எல்லா இடத்திலும் இருப்பார் எல்லா செயல்களையும் புரிவார்

D. கீர்த்திராஜ்
தரம் - 1[T]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல்

தமிழர் திருநாள் என தைப்பொங்கலை சிறப்பித்து கூறுவர்
தமிழ் மக்கள் தை மாதத்தில் கொண்டாடுவார்
உழவர் திருநாள் எனவும் கூறுவர்
சூரியனுக்கு நன்றி தெறிவிக்கும் விழாவாக கொண்டாடுவர்
புதிய பானையை முற்றத்தில் வைத்த பொங்கல் பொங்குவார்கள்
அரிசி பொங்கும் போது பொங்கலோ பொங்கல் என கூறுவார்கள்
வாழையிலையில் பொங்கல் படைப்பார்கள் பொங்கலுடன் பழங்கள் பலகாரங்கள் படைப்பார்கள்
உறவினர் அயலவர்களுக்கு கொடுப்பார்கள்
எல்லோரும் ஒன்றுகூடி மகிழ்வார்கள்

A.தாமின்கோஷன்
தரம் -3T

## நவராத்திரி

நானிலம் போற்றும் நவராத்திரி
நம் நாயகியை போற்றி
புகழும் நவராத்திரி
கோலமிட்டு கொழுவைத்துகுடிபுகும் நவராத்திரி
ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
அள்ளித்தரும் நவராத்திரி
நாவினில் நர்த்தனம்
செய்யும் நவராத்திரி
அலைமகள் கலைமகள்
மலைமகள் ஆட்சி
செய்யும் நவராத்திரி
அற்புதமாய்
கொண்டாடுவோம் நவராத்திரி

R. சாகிலன்
தரம்- 9T

## கலைவாணி

கலைவாணியின் மறுபெயர் சரஸ்வதி
கல்வியை தரும் தெய்வம் சரஸ்வதி
வெண்தாமரையில் சீற்றிருப்பவள் சரஸ்வதி
கையில் வீணை வைத்திருப்பாள் சரஸ்வதி
முப்பெரும் தேவியருக்கு எடுக்கும் விழா நவராத்திரி

K. ஹர்ஷாந்
தரம் -1T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சமயம்

உலகில் பல சமயங்கள் உள. அவற்றுள் எமது நாட்டில் உள்ள சமயங்கள் நான்காகும் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்பனவே அவையாகும். இவற்றுள் கிறிஸ்தவம் இற்றைக்கு 2518 ஆண்டுகளுக்கு முன்னர் பாலஸ்தீனத்தில் யேசு கிறிஸ்துவினாலும் இஸ்லாம் 1894 ஆண்டுகளுக்கு முன்னர் முகமது நபிகளினால் அரேபியாவிலும் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களாகும் ஆயின் எமது சமயமாகிய சைவம் தொடக்க காலம் இல்லாதது, அநாதியானது: மனிதர் எவராலும் உண்டாக்கவும் படாதது.

"சமயம்" என்பது இறைவன் உள்நின்று உணர்த்துவது எனப் பொருள் கூறப்படும். சைவமதத்தை உள்நின்று உணர்த்தும் இறைவன் பெயர் சிவன்.இச் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவம்.எனவே சிவத்தை அடையச் செய்யும் சமயம் சைவ சமயம் என பொருள்படும்.

"சிவம்" இச் சொல்லுக்கு சிறப்பாக ஏற்றுக்கொள்ளப்படும் கருத்து சைவத்திற்கு மூலமான பரம்பொருள் "சிவபெருமான்" என்பது ஆகும். ஆயின் இதன் பொதுவான கருத்து மேலான செம்மையைக் கொடுப்பது மங்களத்தைத் தருவது, பேரினப் நிலைமை அளிப்பது என்பனவாகும்.

சைவத்தின் மூலம் நாம் அடையும் பொருள் யாது என்பதை முதலில் தெளிந்து கொள்வது சைவ சமய சாதனங்கள் மூலம் சைவசமயிகள் அடைய விரும்பும் பொருள் சிவன் அல்லது பேரின்பநிலை என்பதாகும். உலகப் பொருள்களுக்கும், நிலைகளுக்கும் மேலாக (அதீதமாக) நிற்கும் அல்லது விளங்கும் பொருளே சிவன்.

இயற்கையாகவே முற்றறிவு உடையவர். இயல்பாகவே பாசங்களில் இருந்தும் நீங்கியவர் விரும்பு பெறுப்பு இல்லாதவர். எமது மனத்திற்கு எட்டாதவர் அவர் செய்யும் திருவருட் செயல்களினால் மாத்திரம் அறியத் தக்கவர். பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருப்பவர். இவ் இறைவனின் திருவருள் பெற்று அவரது திருவடிகளைச் சேர்தலே சைவத்தின் முடிவான கொள்கை அவரது திருவடி சேர்ந்தவர்களுக்கும் திரும்பவும் பிறப்பு, இறப்பு இல்லை அந்த நிலைதான் முத்திநிலை எனப்படும். அதுகான் கால தேசவர்த்தமானங்களுக்கு அப்பாற்பட்ட பேரின்பநிலை எனச் சைவ நூல்கள் கூறுகின்றன. இந்த நிலைக்குக் கொண்டு செல்வதற்குச் சதானமாக அமைந்த நான்கு படிகள் சைவத்தில் உள. அவை சரியை, கிரிகை, யோகம், ஞானம் என்பனவாகும்.

ஒழுக்கங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் அணிதல் : சிவதீட்சை பெறல்: திருக்கோயில் வழிபாடு,பூசை, செபம், தியானம், தீர்த்தயாத்திரை, அடியார் பூசை முதலியன செய்தல் தோத்திரம், சாத்திர புராண நூல்களை ஒதுதல், ஒதுவித்தல், கேட்டல் போன்ற நற்காரியங்கள் யாவும் ஆன்மாக்களை மேல் நிலைக்கு உயர்த்திச் செல்லுஞ் சாதனங்களாய் அமைந்தவையே. இவற்றின் வழியாகப் பேரின்பநிலை பெற்றவர்களே எமது அறுபத்து மூன்று நாயன்மர்களும் அவர்கள் வரிசையில் குறிப்பிப்படாத மாணிக்கவாசகர் மற்றும் பல ஆள்வார்களுமாவர். இவர்கள் வாழ்க்கை நெறிமுறைகளை நன்றாக அறிதல் சைவ நூல்கள் எல்லாவற்றையும் கற்றுத் தெளிந்ததற்குச் சமமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் இயல்புகள் பற்றி கூறும் நூல்கள் வடமொழியிலுள்ள வேத ஆகமங்களும் தமிழ் மொழியிலுள்ள பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்ளும் முதன்மை பெற்று விளங்குகின்றன இவற்றோடு சைவப் புராணங்கள், இதிகாசங்கள் என இரு பகுதியான நூல்களும் உ ள.

சைவத்தின முதல் நூல்கள் வேதமும் சிவ ஆகமங்களும் எனப்படும் இவை சிவபொருமானாலேயே அருளப்பட்டவையாகும். சைவம் வேத்தைப் பொது நூலாகவும், ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் கொண்டுள்ளது.

சைவம் பழம்பெருஞ் சமயமாக மாத்திரம் நின்றுவிடவில்லை மெசப்போத்தேமியா எகிப்து, கிறீக், சின்ன ஆசியா, சீனா, யப்பான் போன்ற நாடுகளிலும், ஆபிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய கண்டங்களின் பல பகுதிகளிலும் பரவி இருந்தது. அறிஞர்கள் எடுத்துக்காட்டி வருகின்றனர். இப்படியாக உலகின் பல நாடுகளிலும் பரவி இருந்த சைவம் இன்று இந்தியாவிலும், வேறு சில நாடுகளிலுமே நிலவுகின்றது. இந்தியாவில் காஷ்மீரம், பாஞ்சாலம், சிந்து நதிபள்ளத்தாக்கு, ஐக்கிய மாகாணங்கள், பம்பாய், வங்காளம், ஒறிசா, தமிழ்நாடு. ஆகிய பகுதிகளிலும் ஈழம், நேபாளம், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் சைவமும் சைவ சாதனங்களும் இன்றும் வளர்ந்து வருகின்றன.

சம்பந்தர், அப்பர், சுந்தரர்,மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாடிய தேவார திருவாசகங்கள் தான் இன்று சைவத்தின் உயிர் மூச்சு சைவம் உலக நீதிகள் எல்லாவற்றையும் தன்னுள் அடங்கிய அறங்களைக் கூறும் கொள்கைகளை உடையது.

பஞ்சமாபாதகங்களை முற்றாக ஒழிக்கவேண்டும் என்பது சைவத்தின் துணிபு"சைவம்" என்றால் புலாலுண்ணாமை"சைவர்" என்றால் புலாலுண்ணாதவர் என்ற கருத்து இன்று இருந்து வருவது சைவ தருமத்துக்குரிய தனிச் சிறப்பும் பெருமையும் ஆகும். "அன்பே சிவம்" இலங்கும் உயிர் அனைத்தும் ஈசன் கோயில் என்ற சீவகாருணிய பேரறத்தையும் போதிப்பது சைவம். எச் சமயத்தவராயினும் தமது சமயக் கடவுளை வழிபடும் போது அவ் வழிபாட்டை ஏற்று அருள் புரிபவர் மாதொரு பாகராகிய எமது கடவுளே எனவும், முத்தி அடைய விரும்புவோர் எச்சமயத்தில் இருத்தாலும், அச் சமயத்தில் அமைந்துள்ள சாதனங்களை அநுட்டித்து முத்திப்பேற்றை அடையலாம் என்றும் சமய சமரச சமாதானத்தையும் சைவம் கூறுகின்றது.

எனவே, எம்மைப் பிறவித் துன்பத்தில் இருந்தும் நீக்கிய கடவுளோடு சேர்க்கத்தக்க முறைகளைக் கூறும் எமது சைவசமய ஒழுங்குகளின்படி வாழந்து திருவருளுக்குப் பாத்திரமாகும் படி எம்மைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இவ்வடிப்படை எண்ணம் சைவப்பெற்றோரதும், பிள்ளைகளதும் நினைவில் எப்போது இருக்க வேண்டும்.

உசாத்துணை நூல்கள்


- இந்து தர்ம வாழ்சகையும் தத்துவங்களும்
- இந்து சமயத் தத்துவம்
- இந்து பேராளி 2005



S. சுசாந்தன்
13 T கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப வழிபாட்டின் பயன்கள்

திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருக்க வேண்டும். ஐந்து சுடர்களையும் ஏற்றுவது சிறந்தது. நாள் தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒருமுகமே போதுமானது. தீபத்திற்குச் சிறந்தது நெய். நெய் விளக்கேற்றி வழிபட்டால் குலம் தழைக்கும் நல்லெண்ணெய் விளக்கு, மகாலக்ஷ்மி, மகாவிஷ்ணு, சனீஸ்வரனுக்குச் சிறப்பானது. தேங்காயெண்ணெய் விநாயகருக்குசிறப்பானது.இலுப்பை எண்ணெய் நெய்க்கு சமனானது.
பஞ்சினாலே திரியிடலாம், தாமரைத் தண்டின் நூலால் திரியிடல் மிக மிகச் சிறப்பானது. விளக்கின் பாதத்தில் பூவைக்கலாம். அல்லது தண்டின் பாகத்திலே பூச்சரமிடலாம். திரு விளக்கின் மேல் பூவைத்தால், வெப்பத்தினால் கருக வாய்ப்புண்டு.
தற்போது எல்லா விழாக்களிலும் ''மங்கல விளக்கேற்றல்'' என்ற ஒரு நிகழ்ச்சி கட்டாயமான ஒரு நிகழ்வாக ஆக்கப்பட்டுள்ளது. தேவையோ, தேவையில்லையோ விளக்கேற்ற ஒரு பட்டியலே வாசிக்கப்படுகிறது தீபம் ஏற்றும் போது பாதணிகளைக் கழற்றி விட்டு ஏற்றவேண்டும். மெழுகு வர்த்தியைப் பயன்படுத்துவதையும், தலைவிரிகோலமாக நின்று ஏற்றுவதையும் தவிர்த்தல் வேண்டும். விளக்கைச் சுற்றிக் கோலம் போட்டு விளக்கிற்கு திலகமிட்டுப் பூக்களால் அலங்கரித்து மங்கலமாக அமைப்பதே சிறந்ததாகும்.
திருவிளக்கு மகாலஷ்மியின் அம்சம் மிகவும் புனிதமாகப் போற்ற வேண்டும். காலை, மாலை நேரங்களில் பெண்கள் தங்களைத் தூய்மை செய்து கொண்டு மாக்கோலமிட்டு அதில் திருவிளக்கை வைத்து சந்தன குங்குமத்தால் அலங்காரம் செய்து பாதத்திலே மலரை வைத்து தீபம் ஏற்ற வேண்டும். பழைய சங்க நூல்களிலே மாலைக் காலத்திலே நெல்லும், மலரும் தூவி திரு விளகேற்றி இல்லுறை தெய்வத்தைப் பெண்கள் வழிபாடு செய்வது சுட்டிக்காட்டப்படுகிறது. தீப ஒளி பரவும் இடங்களிலே தரித்திரம்,நோய், மன சஞ்சலம் முதலிய தீயவைகள் அண்டாது. செல்வமும், செழிப்பும், சௌபாக்கியமும் ஏற்படும். திருவிளக்கேற்றும் பொழுது தெரிந்த தெரிந்த துதிகளைச் சொல்வது நல்லது.

" இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

குத்துவிளக்கு ஏற்றும் முறைகளும், தத்துவங்களும்

பெண் திருமணமாகி, புகுந்த வீடு செல்லும் போது அந்த வீட்டிற்கு விளக்கு ஏற்றச் செல்வதாகப் பேசப்படுகிறது.
விளக்கின் ஐந்து முகங்களும், பெண்ணுக்கான ஐந்து இலக்கணங்களாக பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. பொறுமை
2. விட்டுக்கொடுக்கும் தன்மை
3. வைராக்கியம்
4. சகிப்புத்தன்மை
5. சமயோசித புத்தி

இவ்வாறான பல பயன்களை நாம் தீப வழிபாட்டின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கா. புஸ்பகாந்தன்
12T கலைப்பிரிவு
2016 நவராத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமயத்தில் வழங்கும் தொகைகள்

1 ஒருவர் - கடவுள்
ஒருநெறி - சைவம்

2 இருமை - இம்மை, மறுமை
இருவினை - நல்வினை, தீவினை
இருசுடர் - சூரியன், சந்திரன்
இருஅறம் - இல்லறம், துறவறம்
இருநிலை - பெத்தநிலை, முத்திநிலை

3 முப்பொருள் - பதி,பசு, பாசம்
மும்மலங்கள் - ஆணவம், கன்மம், மாயை
மூவகை ஆன்மாக்கள் - சகலர், பிரயயாகலர், விஞ்ஞானகலர்
முக்குணங்கன் - காத்துவிகம், இராசதம், தாமதம்
மும்மூர்த்திகள் - பிரமா, விட்டுணு, உருத்திரன்
முத்தொழில்கள் - படைத்தல், காத்தல், அழித்தல்
முத்தேவிகள் - துர்க்கை, இலட்சுமி,சரஸ்வதி
முக்கருவிகள் - அந்தக்கரணம், ஞானேந்திரியம், கன்மேந்திரயம்
முக்கரணங்கள் - மனம் வாக்கு காயம்
முக்காரணங்கள் - முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம்
மூவகை அளவை - காட்சியளவை, கருத்தளவை, உரையளவை
மூவகை மாயை - சுத்தமாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்த மாயை
மூவகை ஆகாமியம் - திருட்டம், திருட்டாதிருட்டம், அதிருட்டம்
மூவகை பிரார்த்தம் - ஆதி பௌதீகம், ஆத்தியான்மிகம், ஆதிதைவிகம்
மூவகைக் கன்மம் - ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம்
மூவகைச் சாதனங்கள் - குரு, இலிங்கம், சங்கமம்
முச்சக்திகள் - இறிவு, இச்சை, தொழில்

4 நால்வேதம் - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்
நாற்காரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம்
நால் வகை முத்தி - சாலேகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்
நாற்பாதங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம்
நாற்பயன் - அறம், பொருள், இன்பம், வீடு
நால் வகை தோற்றம் - கரு, முட்டை, நிலம், வியர்வை
நால் வகை வாக்கு - சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி
நாற்சமயம் - அகச்சமயம், அகப்புறச் சமயம், புறச்சமயம், புறப்புறச் சமயம்
நாற்குரவர் - சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர்
நால்வகை ஆச்சிரம் - பிரமசரியம், இல்லறம், வானப்பிரந்தம், சந்நியாசம்
நால் சந்ததானாசிரியர் - திருநந்திதேவர், சனற்குமாரர்,சத்தியஞானதரிசினிகள் பரஞ்சோதி முனிவர்

5 ஐம்பூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
ஐம் பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி
ஐம்புலன்கள் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
ஐந்தொழில்கள் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்
ஐந்திருமேனிகள் - பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன்
ஐந்தொழில்கள் - படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்
ஐந் தத்துவங்கள் - நாதம், விந்து, சதாக்கியம், ஈகரம், சுத்தவித்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | ஐந்து மந்திரங்கள் | - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சக்தியோ சாதம் |
| | ஐங்கோசங்கள் | - ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமய கோசம், பிரயூயமயகோசம், ஆனங்தமயகோசம் |
| 6 | ஆறு வேதாங்கம் | - சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம் |
| | ஆறு அத்துவா | - மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம். கலை |
| | ஆறு ஆதாரம் | - மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி, ஆஞ்ஞை |
| | ஆறு தரிசனங்கள் | - சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், பூர்வ மீமாம்சை, உத்தரமூமாம்சை |
| 7 | ஏழு வித்தியாகத்துவம் | - காலம், நியதி, கலை, வித்தை, ஆராகம், புருடன், மூலப்பிரகிருதி |
| | ஏழு வகைத் தீட்சை | - நயன தீட்சை, பரிச தீட்சை, வாசக தீட்சை, மானச தீட்சை, சாத்திர தீட்சை, யோக தீட்சை, ஔத்திரி தீட்சை |
| | எழுவகைப் பிறப்பு | - மக்கள், தேவர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் |
| 8 | எட்டுயோக உறுப்புகள் | - இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம் தாரணை, தியானம், சமாதி |
| | அட்ட மூர்த்திகள் | - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், யாகாதிபன் |
| | அட்ட மாதர்கள் | - அபிராமி, வைணவி, மகேஸ்வரி,கௌமாரி, வாராகி, நரசிம்பி, இந்திராணி |
| | எண் குணங்கள் | - தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேரருள் உடமை, விலாற்றல் உடமை வரம்பிலின்பம் உடமை |
| 9 | நவத்தரு பேதம் | - சிவம், சித்தி, நாதம், விந்து, பிரமா, விஷ்ணு, உருத்திரன் மகேசுவரன், சதாசிவன், மனோன்மஓி, சர்வபூகததமணி, பலப்பிபிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, கேட்டை, வாமை |
| 10 | தச காரியங்கள் | - தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம கரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் |

தொகுப்பு
அ. ராஜா ரஞ்ஜித்
பிரதி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி போட்டி முடிவுகள் - 2016

## தேவாரம்

தரம் :- 1
1) 1ம் இடம் A. பிரகாஷ் — A. Prakash
2) 2ம் இடம் K. ஹரிஷாந்த் — K. Harshanth
3) 3ம் இடம் V. கவினாஸ் — V. Kavinash

தரம் :- 2
4) 1ம் இடம் S. கேனுக்ஷன் — S. Kenuksan
5) 2ம் இடம் J. ஹரிஹரன் — J. Hariharan
6) 3ம் இடம் S. தஸ்வின் — S. Thaswin

## பஞ்சபுராணம்

தரம் :- 3
7) 1ம் இடம் S.கிருஷ்விந்தன் — S. Krishvinthan
8) 2ம் இடம் S. ஹரிகேஷன் — S. Harikeshan
9) 3ம் இடம் G.நிலுக்ஷன் — G. Nilukshan

தரம் :- 4
10) 1ம் இடம் G.பிரனேஷ் — G. Pranesh
11) 2ம் இடம் T. மதுஷான் — T. Madushan
12) 3ம் இடம் S.திவாகரன் — S. Divaharan

தரம் :- 5
13) 1ம் இடம் T.யுகலக்சுதன் — T. Yugalakshidan
14) 2ம் இடம் R.கபீஸ்ஹரன் — R. Kabiesharan
15) 3ம் இடம் C.லவன் — C. Lavan

தரம் :- 6
16) 1ம் இடம் P. இளங்கோவன் — S. Elangovan
17) 2ம் இடம் D.நிரோஷ் — D. Nirosh
18) 3ம் இடம் C.யுவன்ஸ்ரீ — C. Yuwansri

தரம் :- 7
19) 1ம் இடம் C.கிஷோர் — C. Kishor
20) 2ம் இடம் K.லதுர்ஷன் — K. Ladurshan

தரம் :- 8
21) 1ம் இடம் C.சதுர்ஷன் — C. Sadurshan
22) 2ம் இடம் J.அரவிந்த் — J. Aravinth
23) 3ம் இடம் C.அரவிந்த — C. Aravinth

தரம் :- 9
1) 1ம் இடம் M. கேஷி — M. Keshi
2) 2ம் இடம் P.திவாகர் — P. Divagar
3) 3ம் இடம் T.சரண் — T. Saran

தரம் :- 10
4) 1ம் இடம் J.தில்ஷான் — J. Dhilshan
5) 2ம் இடம் S.அருண்ஷாந்த் — S. Arunshanth
6) 3ம் இடம் M. அர்ஜுன் — M. Arjun

தரம் :- 11
7) 1ம் இடம் A.வித்யாசாகர் — A. Vidyasakar

தரம் :- 12Tகலைப்பிரிவு
8) 1ம் இடம் K.கமலரூபன் — K. Kamalaruban
9) 2ம் இடம் K. புஷ்பகாந்த் — K. Pushphakanth
10) 3ம் இடம் A. சுஜந்தன் — A. Sujanthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் :- 12 Tவிஞ்ஞானப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1) 1ம் இடம் | R.கிருஷ்ணகுமார் | R. Krishna Kumar |
| 2) 1ம் இடம் | S.சரண்ராஜ் | S. Saranraj |

தரம் :- 12Tவணிகப்பிரிவு

| | | |
|---|---|---|
| 3) 1ம் இடம் | S.பிரவீன் | S. Praveen |

தரம் :- 13Tகலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| 4) 1ம் இடம் | S. ஸ்ரீகாந்த் | S. Srikanth |
| 5) 2ம் இடம் | S.தினுஷ்கரன் | S. Dinushkaran |

## கதை கூறல்

தரம் :- 1

| | | |
|---|---|---|
| 6) 1ம் இடம் | S.மிரோசன் | S. Miroshan |
| 7) 2ம் இடம் | A.நிமேஸ் | A. Nimesh |
| 8) 3ம் இடம் | S.ஆதிஸ் அக்ஷயன் | S. AadishAkshayan |

தரம் :- 2

| | | |
|---|---|---|
| 9) 1ம் இடம் | T.பிருந்தாவன் | T. Brinththavan |
| 10) 2ம் இடம் | S. கவிஷ்விந்த் | S. Kavishvinth |
| 11) 3ம் இடம் | S.பவித்திரன் | S. Pavithran |

## பேச்சு

தரம் :- 3

| | | |
|---|---|---|
| 12) 1ம் இடம் | D.கிருத்திக் | D. Krithik |
| 13) 2ம் இடம் | S.சனுஸ்கவின் | S. Shanushkavin |
| 14) 3ம் இடம் | T.கிஸ்விந்த் | T. Krishwinth |

தரம் :- 4

| | | |
|---|---|---|
| 15) 1ம் இடம் | M. கீர்த்திகன் | M. Keerthigan |
| 16) 2ம் இடம் | N. ஜினேஸ்கர் | N. Gineskar |

தரம் :- 5

| | | |
|---|---|---|
| 17) 1ம் இடம் | J.ருக்ஷான் | J. Rukshan |
| 18) 2ம் இடம் | K.லக்ஹான் | K. Lakson |
| 19) 3ம் இடம் | C.செந்தூரன் | C. Senthuran |

தரம் :- 6

| | | |
|---|---|---|
| 20) 1ம் இடம் | -M.ஸ்ரீமன் | M.P. Shriman |
| 21) 2ம் இடம் | - G.அபிஷேக் | G. Abisek |
| 22) 3ம் இடம் | - N.ருத்தரவாணன் | N. Ruthravanan |
| 23) 3ம் இடம் | - C.யூவன்ஸ்ரீ | C. Yuwan Sri |

தரம் :- 7

| | | |
|---|---|---|
| 24) 1ம் இடம் | R.கபிலேஷ் | R. Kapilaz |
| 25) 2ம் இடம் | R.கிருஷாந்தன் | R. Kirshanthan |
| 26) 3ம் இடம் | P.ருஷாந்தன் | P. Rushandan |

தரம் :- 8

| | | |
|---|---|---|
| 27) 1ம் இடம் | M.சதுர்ஷன் | M. Sadurshan |
| 28) 2ம் இடம் | S.தசிகரன் | S. Thasigaran |
| 29) 3ம் இடம் | D.டிலீசன் | D. Dileshan |

தரம் :- 9

| | | |
|---|---|---|
| 30) 1ம் இடம் | S.ஷவீன் | S. Shaveen |
| 31) 2ம் இடம் | V.நிலுக்ஷன் | V.Nilukshan |
| 32) 3ம் இடம் | Y.கனுக்ஷர் | Y. Ganushkar |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் :- 10

| | |
|---|---|
| 1) 1ம் இடம் A.அகிலேஷ் | A. Agilesh |
| 2) 1ம் இடம் K.தினேஷ் | K. Dinesh |
| 3) 1ம் இடம் T.தில்ருக்ஷன் | T. Dilrukshan |

தரம் : 11

| | |
|---|---|
| 4) 1ம் இடம் B. தக்ஷிகான் | B. Thakshikan |
| 5) 2ம் இடம் K.கோகுலவர்தன் | K. Gokulavardhan |
| 6) 3ம் இடம் P.பிரசாந்த் | P. Prashanth |

தரம் :- 12Tகலைபிரிவு

| | |
|---|---|
| 7) 1ம் இடம் S.R.கிருஷாந்த் | S.R. Krishanth |
| 8) 2ம் இடம் R. மதுஷான் | R. Madhushan |
| 9) 3ம் இடம் A.ஆகாஷ் | A. Agash |

தரம் :- 12Tவிஞ்ஞானப்பிரிவு

| | |
|---|---|
| 10) 1ம் இடம் S.சதுர்ஷஹன் | S. Shdurshan |
| 11) 2ம் இடம் K. ஹரிபிரசாத் | K. Hariprasath |
| 12) 3ம் இடம் N.நிவேதன் | N. Nivedhan |

தரம் :- 12Tவணிகப்பிரிவு

| | |
|---|---|
| 13) 1ம் இடம் M.கைலாஸ் | M. Kailash |

தரம் :- 13Tவணிகப்பிரிவு

| | |
|---|---|
| 14) 1ம் இடம் M.பிரியகாந்த் | M. Priyakanth |
| 15) 2ம் இடம் B. டிலீப் | B. Dilip |
| 16) 3ம் இடம் S.விதுர்சன் | S. Vidhurshan |

## கோலம்

தரம் :- 1

| | |
|---|---|
| 17) 1ம் இடம் Y. ரிந்தேஷ் ஹிரோஷன் | Y. RindeshHiroshan |
| 18) 2ம் இடம் S. கவினாஷ் ஜிகான்சிந் | S. KavinasGihansith |
| 19) 3ம் இடம் B. சமிக்ஷன் | B. Samikshan |

தரம் - 2

| | |
|---|---|
| 20) 1ம் இடம் S. சர்வேஷ் | S. Sarvesh |
| 21) 2ம் இடம் R. ஹரிப்பிரியன் | R. Haripriyan |
| 22) 3ம் இடம் P.சயோன் | P. Shayon |

தரம் :- 3

| | |
|---|---|
| 23) 1ம் இடம் V. ஹரிதரன் | V. Haridaran |
| 24) 2ம் இடம் T.லோகித்ராஜ் | T. Rohithraj |
| 25) 3ம் இடம் R. அஸ்விந்த் | R. Ashwinth |

தரம் :- 4

| | |
|---|---|
| 26) 1ம் இடம் N. ஜினேஸ்கர் | N. Gineskar |
| 27) 2ம் இடம் S.நிதுஷன் | S. Nidushan |
| 28) 3ம் இடம் L. கிதூஷன் | L. Kidhusan |

தரம் - 5

| | |
|---|---|
| 29) 1ம் இடம் K. ஹரிபிரதாப் | K. Hariprathap |
| 30) 2ம் இடம் Mபிரவீன் | M. Praveen |
| 31) 3ம் இடம் N.கனிஸ்கன் | N. Kanishkan |

தரம் :- 6

| | |
|---|---|
| 1) 1ம் இடம் S.செஹான் சதுர்ஷன் | S. ShehanShadursan |
| 2) 2ம் இடம் K.கிரிஷான் | K. Krishan |
| 3) 3ம் இடம் S.பரத் | S. Barath |

தரம் :- 7

| | |
|---|---|
| 4) 1ம் இடம் R.கபில்ராஜ் | R. Kapilraj |
| 5) 1ம் இடம் R.பிரஷாந்த் | R. Preeshaanth |
| 6) 1ம் இடம் U.பவித்திரன் | U. Parithran |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் :- 8

1) 1ம் இடம் M.அபிராம் | M. Abiram
2) 2ம் இடம் P.துர்ஷான் | P. Durshan
3) 3ம் இடம் K.உதேஷன் | K. Udhan

தரம் :- 9

4) 1ம் இடம் P.நவலோஷன் | P. Nawaloshan
5) 2ம் இடம் R. ரிஷி | R. Rishi
6) 3ம் இடம் P.விதூஷன் | P. Vidushan

தரம் :- 11

7) 1ம் இடம் S. மதுஷன் | S. Madhshan
8) 2ம் இடம் M.மிதுஷன் | M. Midhushan
9) 3ம் இடம் J.செந்தூரன் | T. Senthooran

தரம் 13Tகலைப்பிரிவு

10) 1ம் இடம் B.சுதர்ஷன் | B. Sudhrshan
11) 2ம் இடம் . சுசாந்தன் | S .Susanthan

தரம் :- 13Tவணிகப்பிரிவு

12) 1ம் இடம் P.மிதுர்சன் | P. Midhurshan
13) 2ம் இடம் S. ஹரிதரன் | S. Haridharan
14) 3ம் இடம் S.விதுர்சன் | S. Vidhurshan

## கட்டுரை

தரம் :- 10T

15) 1ம் இடம் V.பிரதீப் | V. Pradeep
16) 2ம் இடம் N.சுதர்ஷன் | N. Sudhrshan
17) 3ம் இடம் D.யுகேஷ் | D. Ugash

தரம் :- 11T

18) 1ம் இடம் R.டினுஷன் | R. Dinushan
19) 2ம் இடம் J.கௌதம் | J. Guvtham
20) 3ம் இடம் S.கோகுலேசன் | S. Koguleshan

12Tகலைப்பிரிவு

21) 1ம் இடம் R.கிருஷான் | R. Krushan
22) 2ம் இடம் M. சஷ்டிபிரகாஸ் | M. Sastipragash
23) 3ம் இடம் V.விஜகிருஷாந்த் | V. VijayaKrishanth

12Tவிஞ்ஞானப்பிரிவு

24) 1ம் இடம் P.தனுஷன் | P. Dhanushan
25) 2ம் இடம் S. சஜித் குமார் | S. Sajithkumar
26) 3ம் இடம் V.நிலுக்ஷன் | V. Nilukshan

12Tவணிகப்பிரிவு

27) 1ம் இடம் S. பிரவீன் | S. Piraveen
28) 2ம் இடம் S. ராஜகாந்த் | S. Rajakanth
29) 3ம் இடம் S.கோகுலநாத் | S. Gokulnath

13Tகலைப்பிரிவு

30) 1ம் இடம் M.ரவிந்திரநாத் | M. Ravindranath
31) 2ம் இடம் T.தேவேந்திரன் | T. Deventhiran
32) 3ம் இடம் S. ஸ்ரீகாந்த் | S. Srikanth

தரம் :- 13Tவணிகப்பிரிவு

33) 1ம் இடம் M. அஜய் அரவிந் | M. Ajay Aravinth
34) 2ம் இடம் S. ஹரிதரன் | S. Haridharan
35) 3ம் இடம் M.பிரியகாந்த் | M. Priyakanth

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

Udaya Kodituwakkuarachchi
Proprietor

# BUWANA FOOD COURT

*The Best of Taste*


No. 26, Kotugodalla Veediya,
Kandy.
Tel : 081 4944819

With Best Compliment from

# C-MART

***Quality Wear***
***in***

## Ladies, Kiddies
## Infrant & Born Baby



No. 46, Kotugodella Veediya,
Kandy
Tel : 081 2200141


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment from*

# VASANTHAS

**SINCE 1967**

***the golden midas touch***

**GOLD - SILVER - DIAMOND - PLATINUM**

***Jewellers & Pawn Brokers***



**D.S. Senanayake Veediya, Kandy - 2000, Sri Lanka**
**Tel : +94 812233151, 2224300 Fax : +94 812223627**
**Email : vasanths.kandy@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment from*

# புனித சில்வெஸ்ரர் கல்லூரி இந்து மன்றம் சிறப்புடன் திகழ வாழ்த்துகின்றேன்

திரு. க. கிருஷ்ணமூர்த்தி

(பழைய மாணவர்)

பிரதம பொறியியலாளர்

இலங்கை மின்சார சபை

கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# pathma

godness of cooking




**Sri vimala masala products**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment from*

# Laxmi
## Jewels

**JEWELLERS**
**PAWN BROKERS**



**28, Kotugodalla Veediya, Kandy, Sri Lanka**
**Tel : 0094 81 2239204 / 0094 81 4470187**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment from*

**S.KARUNAGARAN**
Civil Engineer'
B.Sc, Eng.AMIE (SL)

# SKY ENGINEERS

Civil Engineers, Civil Consultants and
Building contractors

**Architectural Astrological House Plans**
**Structural Designig& Drawing**
**Estimation & BOQ**
**Civil Engineering Consulting**
**Construction**
**Site Visits & Management**

**# 515/A, Peradeniya Road, Kandy.**
**Email : skyengkandy@gmail.com**
**Tel: Fax: 081 2232485 Mobile : 076 7620110**

---


*With Best Compliment from*

# ASOKA TEXTILE

Wholesale & Retail Dealers
Batik items & silk sarees etc.

**Boys & Girls School Uniform**

68, Colombo Street, Kandy
Tel : 081 2222597




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

T.Kanagaraja
0777 813177

# The International Hardware Stores

**Authorized Dealers for Asian Paints & Robbialac**
**Water Meters, S-Lon Pipes, Fittings and Hardware Items**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# Devi



**No. 38, D.S. Senanayake Veediya,**
**Kandy, Sri Lanka.**
**Tel/Fax : 081 2224110**
**Email : devijlkandy@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment from*

S.Rewathi (Rewa)
Proprietor

# Princess World

**Dealers in Wholesale & Retail**
**Bridal Jewellery Cosmetics,**
**Salon Accessories Watches.**
**Genuine Leather Pouches & Gift Item Etc.**

**# 422, Peradeniya Road, Kandy**
**Tel : +94 812 221 227 / + 94 777 680 688**
**Email : princessworldlk@gmail.com**



*With Best Compliment from*

# Sri Haran Hardware

**Dealers in Machinery, Water Pumps, Tools**
**Paints, PVC Pipes, Power Tools, and**
**Agents for Asian Paints & Anton Products**

**182, Colombo Street, Kandy**
**Email : kiruba1822@yahoo.com**

**Tel : 0094 81 2223750 / 081 2232371 Fax : 081 2232371**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# ANOKI
JEWELLERS



# 72, Yatinuwara Veediya, Kandy
Tel : 081 2232932
Email : anoki.aj@gmail.com
Web : www.anokijewellers.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

New

# LEE MEDICAL

Wholesale and Retail,

Druggists,

Chemists & Groceries

# 100, Dalada Veediya, Kandy

Tel : 081 2229168

office tel / fax : 081 2220688

With Best Compliment from

# Ravi

## Jewellers

for 22 carat sovereign

No. 95, Colombo Street, Kandy

Tel : 081 2205054, 077 3542786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# Mangalaa

JEWELLERY



68, Yatinuwara Street, Kandy
Tel : 081 2234064 / 2222046
Email: mangalaakandy@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# NAGALINGAMS JEWELLERS

TRUSTED EXCELLENCE FOR OVER 117 YEARS


101, COLOMBO STREET, KANDY

081 2232545

With Best Compliment from

K.Yogarajah

# BALAJI DOSAI



**No. 09, Peradeniya Road, Kandy**


**Tel: 081 5637701**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

V. Kanagarajah

# JAYANTHYS



No. 106, Colombo Street,
Kandy
Tel : 081 2222464
077 2064563

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# STAR ELECTRICALS

**Wholesale & Retail Dealers in**
**Electrical Goods, Lamp Shades**
**Government Suppliers & Contractors**



**60, Kotugodella Veediya, Kandy**

**Tel : 081 2223659 Fax : 081 2238377**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment from

# Raj

## Medical (Pvt) Ltd

**No. 46, Peradeniya Road, Kandy**
**081 2222539**

With Best Compliment from

# City Bag Corner

**Dealers in Wholesale & Retail All kinds of Bags**

***No. 30, Kotugodella Street,***
***Kandy***
***Tel : 081 2232302***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliment from*

**P.Sivagnanam**
**075 5412520**

# Janalanka Hardware




Dealers in Hardware, Paints & Electrical items
595-A, Peradeniya Road, Kandy.
Tel : 081 4915421, 2226467


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Complements from

Aravindha
072 3301848
S.Sagadevan

# NEW ANIWAATTE HARDWARES

Hardware Merchants & Estate Suppliers



No. 48A, George E.De Silva Mawatha,
Kandy - Sri Lanka
Tel : 081 3995549 / 071 8143535



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

- ❖ பிரதம அதிதியாக பெறுமனதுடன் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து எமது கல்லூரியின் பழைய மாணவரும் இலங்கை மின்சார சபையின் (மத்திய மாகாணத்தின்) பிரதம பொறியிலாளருமான திரு. K. கிருஸ்ணமூர்த்தி ஐயா அவர்களுக்கும்.

- ❖ சிறப்பு அதிதியாக வருகை தந்து சிறப்பித்த கண்டி கல்வி பணிமனையின் உதவிக் கல்விபணிப்பாளர் பெருமைக்குரிய திரு A. ஜெயபிராகாஸ் அவர்களுக்கும்.

- ❖ இந்து மன்றம் சிறப்புடன் நடாத்தும் வாணிவிழாவிற்கு நிறைந்த மனதுடன் அனுமதியும் உதவியும் வழங்கிய அதிபர் அவர்களுக்கும்.

- ❖ அயராது பாடுபட்ட ஆசிரியர்கள் மாணவர்களுக்கும்.

- ❖ எமக்கு என்றுமே ஒத்துழைப்பும் உதவியும் வழங்கும் பெற்றோர்கள் பழையமாணவர்களுககும்

- ❖ விளம்பரங்களை உரிய வேளைகளில் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்

- ❖ உரிய நேரத்தில் இதழை வடிவமைப்பு செய்து தந்த Dynamic அச்சகத்திற்கும்.

- ❖ மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றி மறப்பது நன்றன்று – நன்றல்லதை
அன்றே மறப்பது நன்று

இந்து மாணவ மன்றம்
புனித சில்வெஸ்ரர் கல்லூரி கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்ற மாணவர் குழாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DYNAMIC
PRINTERS

Duplo Printing, Offset Printing, Mug Printing
&
Type Setting

*No. 238, Peradeinya Road,*
*Kandy .*
*Tel/Fax 081 2222370*
*Mob : 0777 452 476*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org